எனக்கும் தனிப்பட்ட முறையில் பெருமகிழ்ச்சிதான்.

வெறும் பதினோரு உறுப்பினர்களாக பாராளுமன்றத்தில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவிடாமல் தடுக்க நாங்கள் பட்ட பாட்டுக்கெல்லாம் இன்றைக்கு புரட்சித்தலைவி அவர்கள் பலன் கொடுத்துவிட்டார்கள் என்கின்ற மகிழ்ச்சியை மாண்புமிகு உறுப்பினர்களோடு சேர்ந்து நானும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

## (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1991–92. (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"1991–92 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

### MESSAGE

"In pursuance of clause (3) of Artical 203 of the constitution of India, I Bhisma Narain Singh, Governer of Tamil Nadu, herely recommend to the Tamil Nadu Lesislative Assembly to make further grants to the demands for the year 1991–92."

## 8. முதல் துணை நிதிநிலை அறிக்கை.

## 1991–92 பொது விவாதமும் அவ்வாண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். 1991–92 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டுக்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 1–10–1991 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1991—92 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்ற தீர்மானத்தை நான் பேரவை முன் வைக்கிறேன்.